

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தனது 73–வது பிறந்தநாளையொட்டி, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1,3,2026) முகாம் அலுவலகத்தில் தனது 73–வது பிறந்தநாளை குடும்பத்தினருடன் கொண்டாடினார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தனது 73–வது பிறந்தநாளையொட்டி சிஐடி காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உள்ளார்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (1.3.2026) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, ஆம் ஆத்மி கட்சியின் மாநிலத் தலைவர் வசீகரன் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (1.3.2026) புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி. நாராயணசாமி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் ஜோ. அருண் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார். உடன் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 28.2.2026 அன்று அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அமைந்தகரை சென்னை நடுநிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 4.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.பி., துணை மேயர் மு. மகேஷ்குமார், மாமன்ற ஆளுங்கட்சி தலைவர் ந.இராமலிங்கம், மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, எச்.ஆர். கௌஷிக், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி வசந்தி பரமசிவம், திருமதி மெடிட்டா கோவிந்தராஜ், திருமதி ராணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (1.3.2026) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா மற்றும் நிருவாகிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 28.02.2026 அன்று ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–118, அண்ணா சாலையில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு சமூக நீதி பூங்காவினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் நா. எழிலன், எம்.எல்.ஏ., துணை மேயர் மு. மகேஷ்குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.